அவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்ய எண்ணமிருக்கிறது. ஆனால் இதுவரையிலிருந்த வாடகையினால் ஏராளமான நஷ்டம் வந்திருக்கிறது. சுற்றுலா வாரியம் வியாபார வாரியம். ஆகவே லாபகரமாக நடத்த வேண்டும். அப்படி நடத்துவதற்காகத்தான் 50 சதவிகிதம் அதிகமாக உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன்.

ஜவ்வாது மலையில் வனவிலங்குகள் உய்விடம்

** 397 வினு.*—**திரு. எம். ஏ. லத்தீப் :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

ஜவ்வாது மலையில் விலங்குகள் அதிகமாக வசிக்கும் பகுதியை வன விலங்கு சரணாலயமாக அறிவிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இல்லை.

திரு. கே. எ. வகாப்: தலைவாவர்களே, இப்பொழுது வேடந்தாங்கலில் பறவைகள் சரணாலயம் இருக்கிறது. ஆனால் ஜவ்வாது மலையில் வன விலங்குகள் நிறைய ஏற்படும் சூழ்நிலை நன்றாக இருக்கிறது. எனவே இப்பொழுது அங்கே வனவிலங்குகள் அதிகமாக இல்லாவிட்டாலும் வெளியிலேயிருந்து அஸ்ஸாம் போன்ற இடங்களிலிருந்து கொண்டுவந்து வனவிலங்குகளைப் பாதுகாக்க அரசு இனியாவது முயற்சியெடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவாவர்களே, வடார்க்காடு மாவட்டத்தில் சந்தவாசல் சரகத்தில் மான் பூங்கா அமைக்க திட்டமிருக்கிறது.

லாரி போக்குவரத்தை அரசுடமையாக்கல்

** 398 வினு.*—**திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

லாரி போக்குவரத்தை அரசுடமையாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.